**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 272/2020 |
| Prosecution Witness | : | **அ.சா.**7 |
| Name | : | **ராஜ்குமார் (காவல் ஆய்வாளர் )** |
| Father's / Husband Name | : | **ராஜாங்கம்** |
| Address | : | |
| Age | : | 56/2025 |

**<u>தேதி : 04.02.2026</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ச. மோகனபிரியா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கரூர் மாவட்டம் நங்கவரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.11.2017ம் தேதி 22 மணி அளவில் பெரம்பலூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது ராஜமாணிக்கம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 1231/2017 சட்டப்பிரிவுகள் 420. 506(i) IPC and 4 of TamilNadu Prohibition of Chargiat Exorbitant Interest Act 2003ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் தேவராஜ் அவர்களின் பார்வைக்கு வைத்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் அப்போது பாடாலூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக வேலை பார்த்தேன். கூடுதல் பொறுப்பாக பெரம்பலூர் ஆய்வாளராக வேலை பார்த்தேன். சம்பவம் 03.11.2007 தேதியில் நடந்ததாக முதல் தகவல் அறிக்கையில்

காணப்பட்டது. வழக்கு பதியப்பட்டது 02.11.2017 என்றால் சரிதான். ஏறக்குறைய 10 வருடம் கழித்துதான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ. 1 புகார் தட்டச்சு  செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் எனக்கு மாவட்ட ஆட்சியரிடமிருந்தோ, மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமிருந்தோ மேற்குறிப்பு செய்து வரவில்லை என்றால் சரிதான்.

கந்து வட்டி தடைசட்டத்தின் மாதவட்டி என்ற வார்த்தை இடம் பெறவில்லை என்றால் சரிதான். கந்து வட்டி தடைசட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யும்போது மணிலெண்டர் சட்டத்தை பார்த்தேனா என்றால் இல்லை. அ.சா.ஆ. 1 அவராகத்தான் தன்னிச்சையாக எதிரியை அணுகி கடன் பெற்றுள்ளார்ள ன்று அதற்கு வட்டியாக 5 சதவீதம் தருவதாக அ.த.சா.1 புகாரில் உள்ளது என்றால் சரிதான். அ.சா. 1 எதிரியிடம் ரூபாய் 2 லட்சம் வரை கடன் பெற்றுள்ளார்ள ன்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் கூட்டு வட்டி போட்டு வாங்கப்படுகிறதா அல்லது வேறு வட்டி போட்டு வாங்கப்படுகிறதா என்றால் எனக்கு தெரியாது.

அ.சா.1 புகாரில் வட்டி மாதம் ஒருமுறை கணக்கிடப்படுகிறதா அல்லது வருடம் ஒருமுறை கணக்கிடப்படுகிறதா என்று சொல்லவில்லை என்றால் சரிதான். 1வது சாட்சி அவரிடமிருந்த நிலத்தை எதிரி சட்டத்திற்கு புறம்பாக கைப்பற்றியிருப்பார் என்றும், அந்த பத்திரம் பதிவு செய்யப்பட்ட சார்பதிவாளர் அவர்களை சாட்சியாக இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி முறையாக அரசு உரிமம் பெற்றுதான் வட்டி தொழில் செய்துவருகிறார் என்று சொல்வது சரிதான். எதிரி முறையாக வட்டி தொழில் செய்து வருவது உரிமம் பெற்று அதை 01.04.2016 முதல் 31.03.2019 வரை உரிமத்தை புதுப்பித்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 என்னிடம் புகார் அளித்தபோது எதிரியை நாங்கள் காவல் நிலையத்திற்கு கொண்டுவந்தோமா என்றால் தெரியாது.

இந்த வழக்கு எதிரியின் மீது பொய்யாக போடப்பட்ட வழக்கு என்றாலும், மேல் அதிகாரியின் தூண்டுதலின்பேரில் பொய்யாக போடப்பட்ட வழக்கு என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.